# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1543/39 - 2008 අප්‍රේල් 04 වැනි සිකුරාදා - 2008.04.04

*1543/39 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*மேல் மாகாண சபையின் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நிதி (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டம்*

***98 (3) ஆம் பிரிவின் கீழான கட்டளை***

*மேல் மாகாண, மாகாண சபையின் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டத்தின் 98 (3) ஆம் பிரிவினால் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க மேல் மாகாண, மாகாண சபையின் முதலமைச்சரும் அத்துடன் நிதி திட்டமிடல், நீதி ஒழுங்கு, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கல்வி, போக்குவரத்து, தொழில்துறை, கலை, கலாசாரம் தொடர்பான அமைச்சராகிய பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட் ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய ஆகிய நான், அந்தப் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்டு 2008 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் பதினைந்தாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்படி கீழே காணப்படுமாறு திருத்துகிறேன்.*

*பேஸ்தேருவே லியனராலலாகே ரெஜினோல்ட் ரொஸ்மன்ட் குரே விஜயவர்ணசூரிய,*
*முதல் அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம்,*
*கல்வி, போக்குவரத்து, தொழில்துறை, கலை, கலாசாரம் தொடர்பான அமைச்சர்,*
*மேல் மாகாண மாகாண சபை.*

*முதல் அமைச்சரின் அலுவலகம்,*
*மேல் மாகாண மாகாண சபை,*
*"சிராவஸ்தி மந்திரய",*
*கொழும்பு 7,*
*2008, ஏப்பிறல் 2.*

***ஒழுங்கு விதிகள்***

*இவ்வொழுங்கு விதிகள் மேல் மாகாண, மாகாண சபையின் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி (திருத்தப்பட்டவாறான) நியதிச் சட்டத்தின் பிரிவு 98 (3) (i), (ii), (iii), (iv) தொடர்பான (பரிசுப்போட்டிகள் மீது வரிவிதிப்பனவு) ஒழுங்கு விதிகள் எனக் கருதப்படலாம்.*

(i) *மேல் மாகாணத்தினுள் நடத்தப்படும் பரிசுப்போட்டி ஒவ்வொன்றிலும் வழங்கப்படும் பரிசுகளின் மொத்தப் பெறுமதியின் மீது பின்வரும் முறையில் வீதமுறை வரியொன்று கணிப்பிடப்படும் :*

| *பரிசுகளின் மொத்தப் பெறுமதி* | *வீதமுறை வரி* |
|---|---|
| *ரூபா ஒரு இலட்சத்தினைவிடக் குறைவு* | *வரிவிலக்களிப்பு* |
| *ரூபா இருபத்தைந்து மில்லியன் (ரூபா 25 மி.) அல்லது அதற்குக் குறைவு* | 3% |
| *ரூபா இருபத்தைந்து மில்லியனுக்கு மேல் (ரூபா 25 மி.)* | 5% |

(ii) (அ) அனுமதிப்பத்திரமானது உரிய வடிவத்தில் அட்டவணை "ஆ" இன் பிரகாரம் இருத்தல் வேண்டும்.

(ஆ) அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பம் இதற்கான அட்டவணை "அ" என்பதில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன் காசாக ஆயிரம் ரூபா (ரூபா 1,000) கட்டணமொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(இ) பின்வரும் ஆவணங்கள் அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். அதாவது -

(1) விண்ணப்பதாரியின் பதிவுச்சான்றிதழும் (விண்ணப்பதாரி ஒரு நிறுவனமாக அல்லது ஒரு ஒழுங்கமைப்பாக இருப்பின்) அத்தகைய சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றும் ;

(2) விடயத்திற்கேற்ப அத்தகைய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் சேர்த்து பரிசுப்போட்டிக்கு ஏற்புடையதான விதிகள் அல்லது நிபந்தனைகள் அடங்கிய அங்கீகரிக்கப்பட்ட ஆவணமும் அத்தகைய போட்டியில் வழங்கப்படவுள்ள பரிசுகளின் முழுமையானதும் செம்மையானதுமான விவரணமொன்றும் ;

(3) அனுமதிக் கட்டணத்தின் கொடுப்பனவுக்கான எண்பிப்பாக பற்றுச்சீட்டொன்று அல்லது வேறு ஏதேனும் ஆவணம்.

(iii) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பரிசுப்போட்டியொன்றை மேம்படுத்தக்கூடிய அல்லது நடாத்தக்கூடிய இடம் அல்லது வளவு கூறப்படுதல் வேண்டும்.

(iv) நிதி நியதிச் சட்டத்தின் 98 (3) (iv) என்னும் பிரிவில் கூறப்பட்டதற்கு அமைய விபரத்திரட்டு, அட்டவணை 'இ' இன் பிரகாரம் இறைவரி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இவ்வொழுங்கு விதிகளில் "நிதி நியதிச்சட்டம்" என்பது மேல் மாகாணத்தின் 2006 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நியதிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான மேல் மாகாண மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதி நியதிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

| |
|---|
| அட்டவணை (அ) அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம் |
| அட்டவணை (ஆ) அனுமதிப்பத்திரம் |
| அட்டவணை (இ) விபரத்திரட்டு |

அட்டவணை (அ)

**மாகாண இறைவரித் திணைக்களம் (மேல் மாகாணம்)**

மேல் மாகாணத்தினுள் பரிசுப் போட்டியை நடாத்துவதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்

1. பரிசுப்போட்டியை நடத்துபவரின் பெயர் :........................................................................................

2. பரிசுப்போட்டி நடைபெறவுள்ள இடத்தின் முகவரி :..............................................................................

3. பரிசுப்போட்டியின் பெயர் :...................................................................................................

4. பரிசுப்போட்டி விளம்பரப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்படும் திகதி :...........................................................

5. பரிசுப்போட்டி ஏற்பாட்டாளரின் பெயர் :..........................................................................................................

6. பரிசுப்போட்டி நடைபெறும் திகதி :.............................................

7. பரிசுப்போட்டிக்கான பரிசுகளின் மொத்தப்பெறுமதி :- ரூபா :..............................................

என்னால் இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதிமொழிகின்றேன்.

..........................................................................

கையொப்பம்.

பெயர் :..............................................

பதவி :..............................................

திகதி :..............................................

கவனிக்கப்படவேண்டியது :-

அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான சகல விண்ணப்பங்களுடன் கீழ் கூறப்பட்ட கடித ஆவணங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும் :

1. நிறுவனம் அல்லது அமைப்பின் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் மற்றும் அதனை உறுதிப்படுத்திய புகைப்படப் பிரதி.

2. பரிசுப்போட்டியின் சட்ட விதிகள்/நிபந்தனைகள் வழங்கப்படும் பரிசுகளின் முழுமையான பெறுமதி மற்றும் விபரங்கள் அடங்கிய அங்கீகரிக்கப்பட்ட அட்டவணை மற்றும் அதன் உறுதிப்படுத்திய பிரதி.

3. குறிப்பிட்ட அனுமதிக்கான கட்டணம் பணமாகச் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு (விண்ணப்பங்கள் மேல் மாகாண இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

அட்டவணை (ஆ).

மாகாண இறைவரித் திணைக்களம்,
மேல் மாகாண மாகாண சபை.

**1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் நிதி நியதிச்சட்டத்தின் பிரிவு 98 (2) இன் கீழான பரிசுப்போட்டிக்கான அனுமதிப்பத்திரம்**

அனுமதி இலக்கம் :.................................................... வழங்கப்பட்ட திகதி :....................................................

1. பரிசுப்போட்டியின் பெயர்:.........................................................................................................

2. பரிசுப்போட்டியை நடாத்தும் தனியாளின்/நிறுவனத்தின்/ஒழுங்கமைப்பின் பெயர் :..................................
.........................................................................................................

3. முகவரி :.........................................................................................................................................
.........................................................................................................................................
.........................................................................................................................................

4. போட்டிக்கான பிரவேசத்தின் இறுதித் திகதி :......................................................................

5. பரிசுப்போட்டி நடைபெறும் திகதி :.............................................................................

6. பரிசுப்போட்டி நடைபெற இருக்கும் அமைவிடம்/கட்டிடம் :..............................................................................................

7. நிறுவனத்தின்/ஒழுங்கமைப்பின் பதிவிலக்கமும் திகதியும் :...............................................................................

8. வழங்கப்படும் பரிசுகளின் மொத்தப் பெறுமதி :...............................................................................

* இவ்வனுமதிப் பத்திரம் எந்தப் பரிசுப்போட்டிக்காக வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பரிசுப் போட்டிக்கு மாத்திரமே செல்லுபடியாகும்.

* பரிசீலனைக்காக மேல் மாகாண இறைவரி ஆணையாளரால் அல்லது மாகாண இறைவரித் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரால் கோரப்படும் போது அனுமதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

..............................................................................

இறைவரி ஆணையாளர்,
மேல் மாகாணம்.

திகதி :..............................................

அட்டவணை (இ)

**மாகாண இறைவரித் திணைக்களம் - மேல் மாகாணம்**

1990 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, மேல் மாகாண மாகாண சபையின் நிதி நியதிச்சட்டத்தின் பிரிவு 98 (3) இன் கீழான அறிவித்தல்

பரிசுப்போட்டி வரி - அறிக்கை

தொடர்பு இலக்கம் :....................................................

அனுமதிப்பத்திர இலக்கம் :....................................................

வழங்கப்பட்ட திகதி :....................................................

இவ் அறிக்கையை ஒழுங்கு முறைப்படி பூர்த்தி செய்து பரிசுப்போட்டி பகிரங்கபடுத்தப்படுவதற்கு 14 நாட்களுக்கு முன்பு பெறவேண்டிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விதிக்கப்படும் பரிசுப்போட்டி வரி, போட்டியில் பங்குபற்றுவதற்கான இறுதித்திகதி அல்லது போட்டி நடைபெறும் திகதி என்பவற்றில் முந்திய திகதியிலிருந்து 14 நாட்களுக்கு முன்னர் மாகாண இறைவரி ஆணையாளருக்கு பணமாகவோ அல்லது வங்கிக் கட்டளை மூலமாகவோ செலுத்தப்படல் வேண்டும்.

..............................................................................

மாகாண இறைவரி ஆணையாளர்,
மேல் மாகாணம்.

தொலைபேசி இலக்கம் :..............................................

திகதி :..............................................

1. பரிசுப்போட்டியின் பெயர்:..........................................................................................................

2. நிறுவனத்தின் அல்லது அமைப்பின் அல்லது உரியவரின் பெயர் :..........................................................

3. பரிசுப் போட்டி நடைபெறும் இடத்தின் பெயர் :.......................................................................... ........

4. பரிசுப்போட்டி பங்குபற்றும் கடைசித் திகதி :..........................................................................................

5. பரிசுப்போட்டி நடைபெறும் திகதி :..........................................................................................................
(இத்திகதி மாற்றப்படவேண்டுமாயின் மாகாண இறைவரி ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும்)

6. வழங்கப்படும் பொதுவான பரிசுகளின் மொத்தப் பெறுமதி :- ரூபா :.......................................................
(வழங்கப்படும் பொதுவான பரிசுகளின் மொத்தப் பெறுமதி ரூபா ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இருந்தால் பரிசுப்போட்டி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்)

| பொதுவான பரிசுகளின் மொத்தப் பெறுமதி | வரி - சதவீதம் | வரி |
|---|---|---|
| ................................................................ | 3% | ............................................ |
| ................................................................ | 5% | ............................................ |

(வழங்கப்படும் பரிசுகளின் முழுப் பெறுமதி ரூபா 25 மில்லியன் அல்லது அதற்குக் குறைவாயின் பரிசுப்போட்டி வரி 3% ஆகும். வழங்கப்படும் பரிசுகளின் முழுப் பெறுமதி ரூபா 25 மில்லியனுக்கு அதிகமாயின் பரிசுப்போட்டி 5% ஆகும்.)

மேலே கூறப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானதும் என உறுதிப்படுத்துவதுடன், குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் உரிய வரியை செலுத்துவதற்கும் இணங்குகின்றேன்.

பிரதான ஏற்பாட்டாளரின் கையொப்பம் :..........................................................................................

பிரதான ஏற்பாட்டாளரின் பெயர் :..............................................................................................

வதிவிட முகவரி :..........................................................................................................

தொலைபேசி இலக்கம் :..........................................................................................................

திகதி :..........................................................................................................................

4-468

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.